## டி.எஸ். 4 சான்றிதழ்களை வழங்கும் போது பின்பற்றப்பட வேண்டிய பொதுவான அறிவுறுத்தல்கள்

I. "விண்ணப்பதாரரை நீங்கள் தனிப்பட்ட வகையில் அறிந்துள்ளீரா?" என்ற நிரலில் விண்ணப்பதாரியை தனிப்பட்ட வகையில் அறிந்திருப்பீராயின் அதுபற்றி "ஆம்" எனக் குறிப்பிடுவதற்கு தடைகள் ஏதுமில்லை எனவும், தனிப்பட்ட வகையில் அறிவதில்லை எனின் "இல்லை" எனவும் குறிப்பிடவும்

II. " அறிந்திருப்பீராயின் எவ்வளவு காலத்தில் இருந்து?" எனும் நிரலில் தனிப்பட்ட வகையில் நீர் அறிந்திருப்பீராயின் அக்காலப் பகுதியைக் குறிப்பிடுதல்.

III. பெயர் மற்றும் முகவரி எனக் குறிப்பிடப்பட்டுள்ள நிரலில் விண்ணப்பதாரியின் முழுப் பெயர் (தேசிய அடையாள அட்டை/சாரதி அனுமதிப்பத்திரம்/கடவுச் சீட்டு/ முதியோர் அடையாள அட்டையின் படி) குறிப்பிடுதல்.

IV. "திருமணமானவர்/ திருமணமாகாதவர் (Civil Status) என்பது பற்றி" எனக் குறிப்பிடப்பட்டுள்ள நிரலில் திருமணமானவரா, விதவையா, சட்டத்தால் பிரிந்துள்ளவர்களா என்பது பற்றி தெளிவாக நிரூபிக்கப்படுமாயின் அதுபற்றி குறிப்பிடுதல் மற்றும் திருமணமாகாதவர் என குறிப்பிடும் படி வேண்டி நிற்பதாயின் சத்தியக் கடதாசி மூலம் விண்ணப்பதாரரை உறுதிப்படுப்படுத்தியதன் பின்னர் "சத்தியக் கடதாசியினால் நிரூபிக்கப்பட்டுள்ளது" என அவ்விடத்தில் குறிப்பிடுதல் அல்லது வேறு விடயங்களின் கீழ் அவ்வாறு குறிப்பிடுதல். அதன்போது, சத்தியக் கடதாசியை கோப்பிட்டு வைத்திருத்தல் வேண்டும்.

V. "தந்தையின் பெயர் மற்றும் முகவரி" எனக் குறிப்பிடும் நிரலில் தந்தையின் பெயர் குறிப்பிடப்படாத சந்தர்ப்பத்தில் தாயின் அல்லது சட்டரீதியான பாதுகாவலரின் பெயரைக் குறிப்பிடுதல். (அதன்போது தாய் / சட்டரீதியான பாதுகாவலர் என அவ்விடத்தில் நிவர்த்தியாக குறிப்பிடுதல் வேண்டும்.)

VI. "வசித்திருந்த காலத்தை நிரூபிப்பதற்கு பிற ஆதாரங்களின் தன்மை" என்பதில் வதிவிடத்தை உறுதிப்படுத்திக் கொண்ட விதத்தை குறிப்பிடவும். (அதற்காக ஏற்புடையதாக்கிக் கொள்ள முடியுமான ஆவணங்கள் அட்டவணை 01 இன் கீழ் காட்டப்பட்டுள்ளது.)

VII. "விண்ணப்பதாரர் நீதிமன்றத்தால் குற்றவாளியாக்கப்பட்டவரா?" என்ற நிரலில், குற்றவாளியில்லை எனத் தெரிந்திருந்தால், அதுபற்றி குறிப்பிடுதல் அல்லது குற்றவாளியாக அறிக்கையிடப்பட்டிருப்பின் அதனைக் குறிப்பிடுதல் அல்லது எதுவும் அறிக்கையிடப்படவில்லை எனின், "அறிக்கையிடப்படவில்லை" எனக் குறிப்பிடவும்.

VIII. "அவரின் நடத்தை" எனக் குறிப்பிடப்பட்டுள்ள நிரலில் பிறழ்வான ஏதேனும் ஒரு விடயம் அறிக்கையிடப்படவில்லை எனின், அது பற்றி குறிப்பிடுதல் அல்லது ஆதாரங்களுடன் அறிக்கையிடப்பட்டிருந்தால் அதுபற்றி குறிப்பிடவும்.

IX. வெளிநாடு சென்றுள்ள அல்லது சிறையில் அடைக்கப்பட்டுள்ள அல்லது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தங்கி சிகிச்சை பெறுகின்ற அல்லது இலங்கைக்கு அண்மித்த உள்நாட்டு நீரில் கடமையில் ஈடுபடுகின்ற விண்ணப்பதாரிக்கு மாத்திரம் அதுபற்றி அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரி ஒருவரிடமிருந்து அதனை நிரூபித்து கடிதமொன்றை வழங்கியதன் பின்னர் குடும்ப அங்கத்தவர் ஒருவருக்கு (விண்ணப்பதாரி குறித்த முகவரியில் வசித்துள்ளார் என்பதை உறுதிப்படுத்துவதற்காக மாத்திரம்) டீ.எஸ். 04 சான்றிதழை வழங்க முடியும். அவ்வாறு வழங்கப்பட்டுள்ள குடும்ப அங்கத்தவரின் கையொப்பம் அல்லது கட்டைவிரல் ரேகை 2(எ) இனைப் பெறுவதற்காக மற்றும் அக்குடும்பத்தின் அங்கத்தவர்களின் விபரம் (பெயர், அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி) ஏனைய விடயங்கள் மற்றும் மேலதிக விபரங்களின் கீழ் குறிப்பிடவும். வெளிநாட்டில் வசிக்கும் விண்ணப்பதாரர்களுக்கு, குறித்த விண்ணப்பதாரரினால் நாட்டின் தூதரகம்/உயர் ஸ்தானிகராலயம் மூலம் ஒரு கோரிக்கை கடிதத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.

X. வசிப்பிடத்தைக் கருத்தில் கொள்ளும்போது, வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படாவிட்டாலும், பிற உறுதிப்படுத்தும் முறைகள் மூலம் வதிவிடத்தைக் கொண்டவர் என குறிப்பாக உறுதிப்படுத்துதலின் அடிப்படையில் வதிவிடச் சான்றிதழ்களை வழங்க முடியும். (அட்டவணை 01)

XI. முந்தைய வசிப்பிடத்தை உறுதிப்படுத்துவது தொடர்பில் டீ.எஸ். 04 சான்றிதழுக்கு விண்ணப்பிக்கும் போது முன்னைய வதிவிடம் இருந்த கிராம உத்தியோகத்தர் பிரிவின் கிராம உத்தியோகத்தரால் தற்போதைய வசிப்பிடத்தைக் கொண்ட கிராம உத்தியோகத்தருக்கு வதிவிடம் குறித்த அறிக்கையை சமர்ப்பித்ததன் பின்னர் வதிவிடம் பற்றி திருப்தி அடைய முடியுமாக இருந்தால், பிற விடயங்களின் கீழ் முன்னைய வதிவிடம் குறித்த விபரங்களை உள்ளடக்கி தற்போதைய வதிவிடத்தைக் கொண்ட கிராம உத்தியோகத்தரினால் டீ.எஸ். 04 சான்றிதழை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

XII. டீ.எஸ். 04 சான்றிதழ்கள் (அடிச்சீட்டு) அடங்கிய புத்தகப் பிரதிகளை ஆகக் குறைந்தபட்சம் 12 ஆண்டுகள் வரை அகற்றப்படக்கூடாது என்பதோடு, இது தொடர்பாக அமைச்சின் இலக்கம் HA/3/1/25-1 மற்றும் 2023.02.24 ஆந் திகதிய கடிதம் மூலம் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. (இணைப்பு 02)

XIII. வழங்கப்பட்டுள்ள டீ.எஸ். 04 சான்றிதழொன்றில் அடிச்சீட்டுள்ள புத்தகத்தில் உள்ள பிரதியில் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்றை வழங்குவதற்கு உரித்தாக டீ.எஸ். 04 சான்றிதழை வழங்கிய கிராம உத்தியோகத்தருக்கு அதிகாரம் உள்ளது.

XIV. 16 வயதுக்குட்பட்ட விண்ணப்பதாரர் ஒருவர் டீ.எஸ். 04 சான்றிதழைக் கோரும்போது, கோரப்படும் காரணத்தை எழுத்துப்பூர்வமாகப் பெறப்படப்பட்டதன் பின்னர், தேவைப்பாட்டினைக் கருத்தில் கொண்டு தாய் அல்லது தந்தை அல்லது சட்டப்பூர்வ பாதுகாவலரின் வசிப்பிடத்தைக் குறிப்பிட்டு டீ.எஸ். 04 சான்றிதழ் வழங்கப்படல் வேண்டும். பிற விடயங்கள் மற்றும் மேலதிக விபரங்களின் கீழ், பிள்ளையின் விவரங்கள் (பிள்ளையின் பெயர், பிறந்த திகதி மற்றும் ஆளடையாளம் பிறப்புச் சான்றிதழின் படி சரிபார்க்கப்பட்டதன் பின்னர் வழங்கப்பட்டதாகக் குறிப்பிடுதல்) பதிவு செய்யப்படல் வேண்டும்.

XV. எனது இலக்கம் HAF-3-MISCL-04-001 மற்றும் 2011.06.05 ஆந் திகதிய கடிதத்தின் அறிவுரைகளுக்கு இணங்க கள ஆய்வுக்குப் பின்னர் கிராம உத்தியோகத்தரினால் வதிவிடம் தொடர்பாக தனிப்பட்ட வகையில் திருப்தியடைய முடியுமாயின் வதிவிடச் சான்றிதழை வழங்க முடியும் என்பதோடு, அக்கள ஆயவு தொடர்பில் கடமை நாட் குறிப்பேட்டில் பதிவு செய்து கொள்ளப்படுதல் வேண்டும்.

**அட்டவணை 01**

1. நபர் வசிக்கும் இடத்தின் சொத்து உரிமை குறித்த நபரின் /அவரது தந்தை அல்லது தாய் அல்லது பிள்ளைக்குச் சொந்தமானது என்பதை எடுத்துக்காட்டும் காணி/வீட்டின் உறுதி பத்திரங்கள் போன்றவை

2. செல்லுபடியாகும் குத்தகை ஒப்பந்தம் அல்லது குத்தகைப் பத்திரங்கள், தொடர்புடைய இடம் வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளதாகக் கூறும் வீட்டின் உரிமையாளரால் வழங்கப்பட்ட பிற ஆவணங்கள், நிறுவனத் தலைவர்களால் வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ வீட்டுக் கடிதங்கள்

3. குறித்த நபருக்குச் சொந்தமான சிவில் ஆவணங்களான பிறப்புச் சான்றிதழ், திருமணச் சான்றிதழ் அல்லது பிற ஏற்றுக்கொள்ளக்கூடிய பிற சான்றிதழ்களின் குறித்த முகவரியாக இடப்பட்டுள்ள சந்தர்ப்பம்

4. வசிக்கும் இடத்தின் (வரிப்பணம்) மதிப்பீட்டுப் பதிவு தொடர்பான ஆவணங்கள்

5. வசிப்பிடத்தின் தண்ணீர், மின்சாரம், கையடக்கத் தொலைபேசி, வதிவிட தொலைபேசி, காப்புறுதித் தவணைகள் செலுத்திய பற்றுச்சீட்டுக்கள, வங்கிக் கணக்கு விபரங்கள்

6. அவர் ஒரு அரச அல்லது தனியார் நிறுவனத்தின் ஊழியராக இருந்தால், அவரது வசிப்பிடம் பற்றிய தகவலைச் சான்றளிக்கும் நிறுவனத் தலைவரால் வழங்கப்பட்டுள்ள கடிதங்கள்